BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது , பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பின மக்கள் மீதான நிறவெறி எதிர்ப்பு ஆகியவற்றுக்கான முதுநிலை ஆலோசகர் நியமனம் பற்றி அறிவிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (June 19, 2020) – இன்றைய தினம், சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஆப்பிரிக்க மற்றும் கரீபிய கறுப்பின மக்களுக்கான சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பின மக்கள் மீதான நிறவெறி எதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றுக்கான முதுநிலை ஆலோசகராக திருமதி *க்வின்னெத் ச்சாப்மன்* அவர்களை நியமனம் செய்தது; இந்த நியமனத்திற்கு ஜூன் 10, 2020 ஆம் நாளன்று நகரசபை ஒப்புடல் அளித்தது.

திருமதி ச்சாப்மேன்,அவர்கள் தலைமை நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் இருந்தபடி செயல்படுவார்; இவர் இந்த அமைப்பினை நிறுவுவதற்காக துணை நின்று தலைமை வகிப்பார் மற்றும் ப்ராம்ப்டன் நகரில் கறுப்பினம் மீதான நிறவெறியை ஒழிப்பதற்கான கட்டமைப்பு ரீதியான செயல் திட்டத்தை உருவாக்குவார். உள்ளூர் சமூக செயல்பாட்டாளர்களால் வழிநடத்தப்பட்டு, பிராம்ப்டனின் கறுப்பின சமூகத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பணிகளில் இவர் கவனம் செலுத்துவார்.

சமூக ஈடுபாடு, பரிந்துரை வாதம் செய்தல் மற்றும் தகவல்தொடர்புகள் ஆகிய பிரிவுகளில் பரந்ததொரு பின்னணி கொண்ட திருமதி ச்சாப்மன் அவர்கள், நகரசபை ஊழியர்கள் மற்றும் உள்ளூர் வணிகங்கள் மற்றும் பங்குதாரர்களுடனான முக்கிய தொடர்பாளராக செயல்படும் அனுபவத்தைக் கொண்டு, நகரத்திற்கும் அதிலுள்ள சமூகத்திற்கும் வேண்டிய சேவை வழங்குவார். மிக சமீபத்தில், திருமதி ச்சாப்மேன் அவர்கள் கனடியன் பிளாக் காகஸ் (Canadian Black Caucus), இன்ஸ்பயரிங் அண்ட் எம்பவரிங் யூத் நெட்வொர்க் (Inspiring and Empowering Youth Network) மற்றும் இன்ஸ்பயரிங் யூ மீடியா புரொடக்ஷன்ஸ் (Inspiring You Media Productions) ஆகிய அமைப்புகளின் தலைவராக பணியாற்றினார்; இளைஞர் வலையமைப்பை ஊக்குவித்தார் மற்றும் மேம்படுத்துகிறார், மற்றும் மீடியா தயாரிப்புகளை ஊக்குவித்தார். ஒரு இரக்கமுள்ள சமூகத் தலைவராகத் திகழும் திருமதி ச்சாப்மன் அவர்கள் சி.டி.வி மற்றும் சிட்டி டிவி உள்ளிட்ட தொலைக்காட்சி நிறுவனங்களிலும் பெருமளவில் பணியாற்றியுள்ளார்; கறுப்பின சமூகத்தை முன்னிலைப்படுத்துகின்ற வகையில் தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்; இவை இந்த சமூகத்திற்கு அதிகாரமளிப்பு பற்றி எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளாகும்.

டோரான்ட்டோவின் ஆப்பிரிக்க கனடிய சமூகத்திற்கான வழிகாட்டியாகவும் சமூக தொடர்பாளராகவும் செயல்படுவதன் மூலம் திருமதி ச்சாப்மேன் அவர்கள், இளைஞர்களுடன் பணிபுரிந்த நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளார். திருமதி ச்சாப்மேன் அவர்கல், சமூகத்திற்கான தனது பங்களிப்பிற்காக சாதனை புரிந்த

கனடிய  கறுப்பர் 100 இனப் பெண்களுக்கான விருது பெற்றவர்; கறுப்பர் இன மக்களின் வணிகம் மற்றும் தொழில்ரீதியான சங்கத்தினால் அளிக்கப்படும் மரியாதைக்குரிய பெண் எனும் விருதைப் பெற்றவர்; மேலும் 2008 ஆம் ஆண்டுக்கான சமூக சேவை மற்றும் ஊடகத் துறையில் *ஹாரி ஜெரோம்* விருதுக்கு அவரது சகாக்களால் பரிந்துரைக்கப்பட்டார். 2013 ஆம் ஆண்டில், திருமதி ச்சாப்மனுக்கு சமூக சேவைக்காக ராணி எலிசபெத் II வைர விழா பதக்கம் வழங்கப்பட்டது.

நகரமானது, அதன் ஆப்பிரிக்க மற்றும் கரீபிய  கறுப்பர் இனத்தின்  சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு  மற்றும் கறுப்பர் இனம் மீதான நிறவெறி எதிர்ப்பு அமைப்பை உருவாக்கும்போது அதில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்த, அல்லது மேலும் அறிய AntiBlackRacismUnit@brampton.ca  என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும். இந்த முக்கியமான முயற்சியானது, மேயர், கவுன்சிலர்கள் மற்றும் சமூக பங்குதாரர்களுடன் இணைந்து தலைமை நிர்வாக அதிகாரி அலுவலகத்தினால் மேற்பார்வையிடப்படும்.

இந்த செயல்பாட்டில் சமுதாயத்தினர் ஈடுபடுவதற்கும் அவர்களின் குரலைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புகள் மிக அருகாமையில் எதிர்காலத்தில் பகிரங்கமாக பகிரப்படும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம்; இதன் படி வியாபித்திருக்கின்ற  கறுப்பு இனம் மீதான நிறவெறியை நமது சமூகங்கள் ஒன்றிணைந்து எதிர்த்து நிற்கின்றன. பொது மக்களுக்கான அரசு ஊழியர்கள் என்ற வகையில், உண்மையான மாற்றத்திற்கு வழிவகுக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுப்பது நமக்கு கட்டாயமாகிறது. திருமதி ச்சாப்மேன் மற்றும் ஆப்பிரிக்க மற்றும் கரீபியன் கறுப்பர் இன சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் இனம் மீதான நிறவெறி எதிர்ப்பு அமைப்பு  ஆகியவற்றுடன் இணைந்து நமது நகரத்திற்குள் உண்மையான சமத்துவத்தை உருவாக்குவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஒரு நகரமாக இருந்தபடி, ப்ராம்ப்ட்டனின் பலவிதமான சமுதாயங்களுக்கு ஆதரவளித்து, அதற்காக செய்யப்படும் பணிகள் இதை பிரதிபலிக்கச் செய்ய வேண்டிய  மகத்தான பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்பதை நாங்கள் அறிவோம். வியாபித்திருக்கின்ற கறுப்பர் இனம் மீதான நிறவெறிக்கு எதிரான எங்கள் செயல் திட்டத்தை உருவாக்குவதில் முன்னணி வகிக்க திருமதி சாப்மேன் ஒரு மதிப்புமிக்க பங்கை வகிப்பார். அனைவரையும் உள்ளடக்குகிற, பரிவுமிக்க மற்றும் சமத்துவமான ஒரு சமுதாயம் மற்றும் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் உதவுவார்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“சமுதாயத்தில் இனவெறிக்கு தீர்வு காணுவதற்கென ஒரு செயல்பாடுள்ள அணுகுமுறை கொண்டிருக்கின்ற ப்ராம்ப்டன் நகர நிர்வாகத்துடன்  சேருவதில்  நான் மகிழ்ச்சியடைகிறேன். நகரத்தின்

ஊழியர்கள், நகரசபை மற்றும் உள்ளூர் சமூகத்துடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கான இந்த தலைமைத்துவ வாய்ப்பை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்; மேலும் ப்ராம்ப்ட்டனில் நிறவெறிக்கு எதிராக திறம்பட பதிலளிப்பதற்கும் அதை ஒழிப்பதற்கும் ஒத்துழைக்கும்போது எனது அனுபவத்தை உபயோகித்துக் கொள்கிறேன். நாம் ஒருவருக்கொருவர் சொந்தம் என்ற உணர்வை நாம் உருவாக்க வேண்டும். நமது குடிமக்களின் பயன்படுத்தப்படாத திறன், அர்த்தமுள்ள மாற்றத்திற்கு பங்களிப்பதற்கான அவர்களின் விருப்பம் மற்றும் நகரத்தின் அதிவேக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கான வாய்ப்பு ஆகியவற்றை நாம் இனம் காண வேண்டும். மிக நீண்ட காலமாகவே, புத்திசாலித்தனமான, புதுமையான, கடின உழைப்பாளிகளாகிய கனடிய கறுப்பின மக்கள் உதாசீனம் செய்யப்பட்டு அவர்களின் நிறம் காரணமாகவே உரிய அங்கீகாரம் அளிக்கப்படுவதில்லை மற்றும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். இது இப்போது முடிவுக்கு வர வேண்டும்! நமது நகரம் பெரிய நகரமாக இருக்க நாம் அனைத்து குடிமக்களுக்கும் உரிய அங்கீகாரம் அளிக்க கடமைப்பட்டிருக்க வேண்டும். எந்தவொரு குழுவையும் உதாசீனம் செய்வது என்பது இனிமேற்கொண்டு நடக்காமல் பார்த்துக்கொள்வோம். ”

*- க்வின்னெத் ச்சாப்மன், முதுநிலை ஆலோசகர், பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பர் இனம் மீதான நிறவெறி எதிர்ப்பு,*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca